# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.223/2018

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW1 |
| Name | : Sekar |
| Father/Husband's Name | : Govindasamy |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03.09.2025.

**குறுக்கு விசாரணை:**

எனக்கும் எதிரிக்கும் எவ்வளவு வருடம் பழக்கம் என்றால் 14-15 வருடங்களாக பழக்கம். எதிரி எங்கு எந்த மாதிரியான வியாபாரம் செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் building contractor ஆக வேலை செய்கிறார். நான் என்ன கடை வைத்திருக்கிறேன் என்றால் ஸ்ரீசக்திமுருகன் hardware கடை வைத்திருக்கிறேன். நான் ஜிஎஸ்டி முறையாக கட்டி வருகிறேனா என்றால் அந்த காலகட்டத்தில் கட்டவில்லை. தற்போது கட்டி வருகிறேன். அந்த காலத்தில் முறையாக வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த காலத்தில் கட்டவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ரசீது பணத்தை பெற்று கொண்டு கொடுக்கும் ரசீது என்றால் சரிதான். பொதுவாக பணம் கொடுத்தால் ரசீது கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். பொதுவாக பொருள் வாங்கிவிட்டு பணம் கொடுக்கவில்லை என்றால் பாக்கி கொடுக்க வேண்டும் என்று தனியாக ஆவணம் ஏதேனும் வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. அவ்வாறு ஆவணம் எதுவும் வைத்திருக்காததால் பணம் பெற்று கொண்டதற்கான ஆவணம் என்றால் சரியல்ல. என்னிடம் எந்த பணம் பாக்கியும் வைக்காமல் தான் எதிரி என்னிடம் பொருள் வாங்கினார் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் நான் படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். எந்த தேதியிலிருந்து எனக்கும், எதிரிக்கும் பண பரிவர்த்தனை இருந்தது என்றால் 11.02.2012 முதல் 15.04.2013 வரை இருந்தது.

நானும், எதிரியும் எந்த தேதியில் ஒப்பந்தம் செய்வதற்கு முன்பு எவ்வளவு பணம் பாக்கி இருந்தது என்றால் ரூ.10,21,653/- ஆகும். இதற்கிடையில், நான் பண பாக்கி எதிரியிடம் கேட்டேனா என்றால் கேட்டுக்கொண்டிருந்தேன். இந்த பண பிரச்சனை இருந்தபோது எதிரியும், நானும் நில தொடர்பான ஒப்பந்தம் செய்து கொண்டு எதிரிக்கு ரூ.3 லட்சம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். ரூ.3 லட்சத்தை எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்க பணமாக கொடுத்தேன். அந்த ஒப்பந்தத்தில் ஏற்கனவே இருக்கும் பாக்கி பணத்தை பற்றி சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. அவ்வாறு எதிரி எனக்கு பண பாக்கி கொடுக்க வேண்டும் என்றால் அந்த ஒப்பந்தத்தில் அதை பற்றி சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. அவ்வாறு கிரைய செய்யவில்லை என்பதால் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. அந்த நிலத்தை வாங்குவதற்கு முயற்சி ஏதேனும் எடுத்தேனா என்றால் சட்ட ரீதியான முயற்சி ஏதும் எடுக்கவில்லை. எந்த தேதியில் ஒப்பந்தம் செய்தேன் என்றால் 23.01.2017 ஆகும். நான் நில கிரையம் ஒப்பந்தம் தொடர்பாக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஒப்பந்தம் சம்பந்தமான பிரச்சனைக்கு உரிமையியல் நீதிமன்றம் தான் தீர்வு என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. உண்மையாகவே எனக்கும், எதிரிக்கும் ஒப்பந்தம் இருந்திருந்தால், நான் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு ஒப்பந்தம் ஏதும் செய்து கொள்ளாததால் தான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்தம் போட்ட இடத்திற்கு எதிரிக்கும் என்ன சம்பந்தம் என்றால் அந்த இடத்திற்கு எதிரி பவர் பத்திரம் வைத்திருக்கிறார். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நானும், எதிரியும் செய்து கொண்டதாக சொல்லப்படும் ஒப்பந்தத்தில் பவர் ஆவணத்தின் எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பிளாட் எண்.1 மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. பவர் ஆவணத்தை நான் பார்க்கவில்லை, நண்பர் என்ற முறையில் நான் ஒப்பந்தம் செய்தேன். மதசா.ஆ1 ல் பவர் ஆவணத்தின் எண் காலியாக விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த தேதியில் பவர் பத்திரம் அமலாக்கப்பட்டது என்பது குறித்து காலியாக விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பவர் ஆவணத்தை பார்க்காமல் நான் எதிரிக்கு ரூ. 3 லட்சம் பணம் கொடுத்தேனா என்றால் நண்பர் என்ற முறையில் கொடுத்தேன். அந்த நிலம் எங்குள்ளது என்றால் கிழக்கு திசையில் ரோடு உள்ளது. அவ்வாறு நிலத்தின் 4 எல்லைகள் பற்றி நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரியுடன் ஒப்பந்தம் ஏதும் செய்து கொள்ளவில்லை என்றாலும் அதனால் தான் நிலத்தை பற்றி விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு ஒப்பந்தம் செய்திருந்தால் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, நிலத்தை பெற

முயற்சி செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி நிலத்தை பதிவு செய்து கொடுக்குமாறு கேட்டிருப்பேன் என்றாலும் சரியல்ல. ரூ.3லட்சம் கொடுப்பதற்கு எனக்கு ஆதாயம் உள்ளது என்று நிருபிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. ஆனால் என்னிடம் உள்ளது. காசோலை எந்த தேதியில் எதிரி கொடுத்தார் என்றால் 2013ல் தான் எதிரி எனக்கு காசோலை கொடுத்தார். தற்போது சாட்சி 07.06.2018ம் தேதியில் காசோலை கொடுத்ததாக சொல்கிறார். அந்த அசல் காசோலை எங்குள்ளது என்றால் என்னிடமிருந்து தொலைந்து போய்விட்டது. காணாமல் போனதற்கான சான்றிதழ் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். அவ்வாறு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் காசோலை காணாமல் போனதாக கொடுத்த புகாரின் பேரில் கொடுத்த சிஎஸ்ஆர் யை தவறான புகார் என்று முடித்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அசல் காசோலையை பார்த்தால் தான் கையெழுத்து மற்றும் பேனா மை குறித்து உண்மை தன்னை தெரிய வரும் என்றால் சரியல்ல. நான் மோசடி செய்து கையெழுத்தை மாற்றி போட்டு அசல் காசோலையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால், உண்மை நிலவரம் தெரிய வரும் என்பதால் நகல் காசோலையை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. கடன் அடிப்படையில் பொருள் கொடுத்ததற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரசீது கொடுத்திருக்கிறேன். நிலம் தொடர்பான ஒப்பந்தம் செய்ததற்கான வில்லங்க சான்றிதழ், பவர் ஆவணம் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த நிலம் தொடர்பான தாய் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததற்கு வருமான வரி கணக்கோ, ஜிஎஸ்டி ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.10 லட்சம் மற்றும ரூ.3 லட்சம் கொடுப்பதற்கான ஆதாயம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நகல் காசோலை தாக்கல் செய்திருக்கிறேன். 06.09.2018ம் தேதி வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தபோது அசல் காசோலையை நீதிமன்றத்தில் காண்பித்தேன். அசல் ஆவணம் நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் நகல் காசோலை தான் குறியீடு செய்யப்பட்டுள்ளது. காணாமல் போனதற்கான சான்றுகள் போலீசாரிடம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்து இருக்கிறேன். எதிரிக்கும், எனக்கும் நண்பர் என்ற முறையில் எந்த பழக்கமும் இல்லை என்றாலும், எதிரி எனக்கு எந்த கடன் நிலுவை தொகை எதுவும் இல்லை என்றாலும் , இந்த வழக்கு காசோலை கடன் நிலுவை தொகைக்கு கொடுத்த காசோலை இல்லை என்றாலும் சரியல்ல. காசோலையை மோசடியாக பயன்படுத்தி எதிரிக்கு எதிராக பொய்யான வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.